V11Eco

விருதுநகர் மாவட்டம்

இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2023

# வகுப்பு 11

## பொருளியல்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள்: 50

### பகுதி - I

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 10×1=10

ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) FDI என்பதன் விரிவாக்கம்

அ) வெளிநாட்டு தனியார் முதலீடு

ஆ) வெளிநாட்டு தொகுப்பு முதலீடு

இ) வெளிநாட்டு நேரடி முதலீடு

ஈ) வெளிநாட்டு செலவாணி தனியார் முதலீடு

2) சிறப்பு பொருளாதார மண்டலக் கொள்கை வெளியிடப்பட்டது

அ) ஏப்ரல் 2000 ஆ) ஜூலை 2000 இ) ஏப்ரல் 2001 ஈ) ஜூலை 2001

3) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி சட்டம் அமல்படுத்தப்பட்டது

அ) 2017 ஜூலை 1 ஆம் தேதி ஆ) 2016 ஜூலை 1 ஆம் தேதி

இ) 2017 ஜனவரி 1 ஆம் தேதி ஈ) 2016 ஜனவரி 1 ஆம் தேதி

4) GSTயில் அதிகபட்ச வரிவிதிப்பு ஆகும்.

அ) 18% ஆ) 24% இ) 28% ஈ) 32%

5) 2011 கணக்கெடுப்பின் மொத்த மக்கள் தொகை ஊரகத்தில் வாழும் மக்கள் தொகை சதவீதம் என்ன?

அ) 40 ஆ) 50 இ) 60 ஈ) 70

6) ஊரக வேலை ஏழ்மைக்கான காரணத்தை சுட்டுக.

அ) வேளாண்மை சாரா வேளாண்மை ஆ) அதிக வேலை நிலை

இ) குறைந்த பணவீக்க வீதம் ஈ) அதிக முதலீடு

7) ''இந்திய விவசாயி கடனாளியாக பிறந்து, கடனாளியாக வாழ்ந்து, கடனாளியாக இறந்து, கடனையே சந்ததிக்கு விட்டுச் செல்கிறான்'' - இச்சொற்றொடரைக் கூறியவர் யார்?

அ) ஆடம்ஸ்மித் ஆ) காந்தி

இ) அமர்த்தியா சென் ஈ) சர் மால்கம் டார்லிங்

8) பாலின விகிதத்தில் தமிழ்நாட்டின் தரம்

அ) முதல் ஆ) இரண்டாவது இ) மூன்றாவது ஈ) நான்காவது

9) எழுத்தறிவு வீதத்தில் தமிழ்நாட்டின் தரம்

அ) இரண்டு ஆ) நான்கு இ) ஆறு ஈ) எட்டு

10) SPIC அமைந்துள்ள இடம்

அ) சென்னை ஆ) மதுரை இ) தூத்துக்குடி ஈ) புதுக்கோட்டை

### பகுதி - II

குறிப்பு: ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். 5×2=10

வினா எண் 18-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

11) LPG கொள்கையை செயல்படுத்தக் காரணம் என்ன?

12) முதலீட்டைத் திரும்பப் பெறுதல் - வரையறு.

13) மத்திய மற்றும் மாநில அரசுகள் அறுவடைக்குப் பின் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் உட்கூறுகளை கூறுக.

14) மறைமுக வேலையின்மை என்றால் என்ன?

15) ஊரக வீட்டு வசதி பிரச்சனைக்கான காரணங்களில் ஏதேனும் இரண்டு கூறுக.

16) தமிழ்நாட்டுக்கேற்ற நான்கு உணவு பயிர்களை குறிப்பிடுக.

17) பாரம்பரிய சுற்றுலா என்பது என்ன?

18) குறு நிறுவனங்கள் வரையறு.

## பகுதி - III

**குறிப்பு: ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 26-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **5×3=15**

19) வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை பற்றி குறிப்பு வரைக.

20) விவசாய உற்பத்தி அங்காடிக் குழுவின் பணிகளை கூறுக.

21) GST என்றால் என்ன? அதன் நன்மைகளை எழுதுக.

22) ஊரக வறுமையை நீக்குவதற்கான வழிமுறைகளை கூறுக.

23) MUDRA வங்கியின் நோக்கங்களை பட்டியலிடுக.

24) தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியை விளக்குக.

25) தமிழ்நாட்டின் ஜவுளித்துறை முன்னேற்றம் பற்றி விவரி.

26) சுகாதாரத் துறையில் தமிழ்நாட்டின் செயல்திறனை விளக்குக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்:** **3×5=15**

27) அ) தொழில் கொள்கை தொடர்பாக இந்திய அரசு மேற்கொண்ட முயற்சிகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) மக்கள் தொகையின் தரமான அம்சங்களை விவரி.

28) அ) சிறப்பு பொருளாதார மண்டலங்களின் நோக்கங்களையும் பண்புகளையும் விளக்குக.

**(அல்லது)**

ஆ) ஊரக கடன்களுக்கான காரணங்களை ஆராய்க.

29) அ) ஊரக பொருளாதார பிரச்சனைகளை ஆராய்க.

**(அல்லது)**

ஆ) தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக.

----------

www.Padasalai.Net